**ஜயா கன்டேனர் டேர்மினல்ஸ் லிமிடட் கம்பனி - 2023**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஜயா கன்டேனர் டேர்மினல்ஸ் லிமிடட் கம்பனியின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்ட கூற்று, விபரமான ஏனைய வருமான கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, மற்றும் முக்கியமான கணக்கீட:டு கொள்கைகளுக்குரிய தகவல்கள் உள்ளடங்கலாக நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து கம்பனியின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் காட்டும் வகையில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கெண்டேன். இந்த அறிக்கையின் நிதிக்கூற்று கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது கம்பனியின் தொடர்ந்தியங்கும் இயலுமையைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பென்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் கம்பனி தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பாக பரீட்சிக்கும் பொறுப்பு தொடர்புபட்ட தரப்பினர்களினால் வகிக்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான 3 வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவைபெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக கம்பனியின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிதியத்தின் உள்ள ஆற்றல் தொர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல், பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியவையாக

காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத் தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது நிதியத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிதியத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபையின் செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைதிறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

### 1.5 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2023 ஆம் ஆண்டின் போது கம்பனியின் பயன்பாட்டிற்காக 13,140,300 லீற்றர் லங்கா ஒடோ டீசலர் மற்றும் 11,186,700 லீற்றர் உலை எண்ணை (Furnace oil) கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாத லங்கா ஒடோ டீசல் மற்றும் உலை எண்ணை முறையே 17,355 லீற்றர் மற்றும் 4077 லீற்றர் தாங்கியில் மிகுதியாக இருந்தது. இந்த மீதிகள் ஆண்டின் இறுதியில் இருப்பு கணிப்பின் போது தவிர்க்கப்பட்டுள்ளதனால் அவற்றில் ரூபா 6,910,621 மொத்த பெறுமதியான ரூபா 5,758,909 தொகையான ஒடோ டீசல் | இந்த எரிபொருட்கள் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்திடமிருந்து கொளவனவு செய்து எங்கள் நிறுவனத்தின் பொயிலர்களுக்கும் பொம்பிகளுக்கும் நாளாந்த செயற்பாட்டு தேவைப்பாடுகளுக்காக ஈடுபடுத்துவதற்காக பேணப்படுகின்றது. இந்த இருப்பு நீண்டகாலமாக காணப்படாததுடன் கொள்வனவு செய்த எண்ணைகள் ஒரு மாதம் அளவில் காணப்படுவதுடன் நாளாந்த செயற்பாட்டு தேவைப்பாடுகளுக்காக பம்பிகளுக்கும் பொயிலர்களுக்கும் | நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படுகின் ற செலவுகள் சரியான வகைப்படுத்தலுக்கு இணங்க கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் ரூபா 1,151,712 தொகையான உலை எண்ணைகளின் பெறுமதியால் நிதி நிலைமை கூற்றில் நடைமுறைச் சொத்துக்கள் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | ஈடுபடுத்தப்பட்டது. இவற்றினை கொள்வனவு செய்வதற்கு ஏற்பட்ட செலவுகள் தொடர்பாக பெற்றோலியக் கணக்கில் காட்டப்பட்டுள்ளது. எங்கள் நிறுவனம் ஆரம்பத்திலிருந்தே அதாவது 2008 ஆம் ஆண்டிலிருந்தே இந்த இருப்பினை நடைமுறைச் சொத்துக்களாக அறிக்கையிட்டு காட்டியிருக்கவில்லை. | |
| (ஆ) | 2012 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட குறைந்த வட்டி மீதான கடன்களுக்குரிய வட்டி மற்றும் பணிக்கொடை கணிப்பினை கணக்குகளுக்கு செம்மையாக்கும் போது உருவாகியிருந்த ரூபா 3,294,694 தொகையான 02 செலவு மீதிகள் வருடாந்தம் முன்கொண்டுவரப்பட்டிருந்ததுடன் 2023 ஆம் ஆண்டின் போது உத்தியோகத்தர்களுக்குச் செலுத்தப்பட்ட சம்பளக் கணக்கில் செம்மையாக்கியதன் காரணமாக மீளாய்வாண்டிற்கான சம்பளம் ரூபா 3,294,694 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | 2012 ஆம் ஆண்டின் பொது SLFRS புதிய கணக்கு முறைமை அறிமுகப்படுத்தப்பட்டதோடு எங்கள் நிறுவனத்தில் அப்போது கணக்குகளின் கணக்காய்வினை மேற்கொண்ட PWC (Pvt) Ltd நிறுவனத்தினால் ஊழியர்களின் குறைந்த வட்டி கடன் மற்றும் பணிக்கொடையை கணித்தல் தொடர்பாக கணக்குகளை அறிக்கையிடுவதற்குரிய செம்மையாக்கல்கள் மேற்கொள்ளப்பட்ட மீதியே இக்கணக்கில் காணப்பட்டது. இக்கணக்கின் மீதி தொடர்ச்சியாக காணப்பட்டமை தொடர்பாக உங்களால் வாய்மொழி மூலம் விசாரணை செய்யப்பட்டதனால் மற்றும் அக்கணக்கின் மீதி சிக்கனமற்ற மீதியாகவும் இருந்ததனால் அதனை இந்த ஆண்டின் போது அதிகளவில் செம்மையாக்கப்படுகின்ற ஒரு கணக்கினூடாக செம்மையாக்கல் மேற்கொள்ளப்பட்டது. அந்த மீதியானது எந்த கணக்கினூடாக செம்மையாக்கல் மேற்கொள்ளப்பட்டாலும் இலாபத்திற்கான தாக்கத்தை தவிர்க்க முடியாது. | ஆண்டிற்கான செலவுகளை சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்திடமிருந்து 2022 ஆம் ஆண்டின் மார்ச் மாதத்திலிருந்து திசெம்பர் மாதம் வரையான காலம் தொடர்பாக அறவிடப்பட்ட இடவசதி பயன்படுத்தப்படாத தண்டப் பணம் ரூபா 1,334,429 ஆக இருந்ததுடன் அப்பணத்தில் மீளாய்வாண்டில் கம்பனிக்கு அறவிடப்பட்ட 55 சதவீத்திற்குச் சமமான ரூபா 733,936 பணம் வருமானத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டதனால் மீளாய்வாண்டிற்கான வருமானம் அத்தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டின் போது அந்த வருமானம் எங்கள் நிறுவனத்தின் வருமானத்திற்கு கணிப்பிடப்படாததானது அந்த தண்டப் பணத்திற்குரிய இன்வொயிஸ் 2023 ஆம் ஆண்டின் போது இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டது என்பதனாலாகும். அந்த இன்வொயிஸ் 2023 சனவரி மாதம் வழங்கப்பட்டதனால் அந்த வருமானம் 2023 ஆம் ஆண்டிற்கான வருமானத்திற்கு கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது. 612 மில்லியன் பெறுமதியுடன் ஒப்பீடு செய்யும் போது இதன் தாக்கம் 0.1% இனை விட குறைவாகும். | ஆண்டிற்குரிய வருமானத்தை சரியாக அடையாளங்கண்டு சரியாக சமர்ப்பித்தல் வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| (அ) | 1954 ஆகஸ்ட் 09 ஆந் திகதிய 19 ஆம் இலக்க கடைகள் மற்றும் அலுவலக ஊழியர் அதிகாரச் சட்டத்தின் I ஆம் பகுதியின் 3 ஆம் பிரிவு | ஏதாவது ஒரு நிறுவனத்தின் ஊழியர்கள் வேலை முறைமைக்கு சேவையில் ஈடுபடுத்தப்படுவார்களாகயிருந்தால் ஒரு நாளுக்கு உச்ச அளவாக 08 மணித்தியாலங்களுக்கு மற்றும் ஒரு வாரத்திற்கு 45 மணித்தியாங்களுக்கு மட்டுப்படுத்தப்பட வேண்டிய போதிலும் அதற்கு முரணான வகையில் கம்பனியினால் 2023 ஆம் ஆண்டின் போது செயற்பாட்டு ஆளணியிலுள்ள 40 ஊழியர்கள் 24 மணித்தியால வேலை முறைமைக்காக சேவையில் ஈடுபடுத்தியிருந்ததுடன் வாரத்தில் 02 நாட்கள் மாத்திரம் சேவை பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. | கம்பனியின் சேவை தேவைப்பாட்டிற்கு இணங்க 24 மணித்தியால சேவை வேலை முறைமையானது செயற்பாட்டு நடவடிக்கையை வினைத்திறனாகவும் தடையின்றியும் மேற்கொள்வதற்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மேற்கூறய 24 மணித்தியால சேவை வேலை முறைமையை தொடர்ச்சியாக பேணுவதற்காக 2021-02-25 ஆந் திகதி பணிப்பாளர் சபை அங்கீகாரம் கிடைத்துள்ளது. | ஊழியர்களின் வேலை செய்ய வேண்டிய காலமானது அதிகாரச் சட்டத்தில் காட்டப்பட்டுள்ளவாறு அமுல்படுத்தப்படுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 56 ஆம் பிரிவு | கம்பனியால் 2022 ஆம் ஆண்டிற்கான இலாபத்தில் ரூபா 25,000,000 பங்கிலாபமாக செலுத்தப்பட்டிருந்ததுடன் அந்த பங்கிலாபம் செலுத்தியதன் பின்னர் பணிப்பாளர்களால் கடன் செலுத்தும் இயலுமை தொடர்பாக பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றது எனக் குறிப்பிட்டு சான்றிதழ் அல்லது அது தொடர்பாக கணக்காய்வாளர்களிடமிருந்து சான்றிதழினைப் பெற்றுக்கொள்வதற்கேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கடன் செலுத்தும் இயலுமை தொடர்பான ஒரு சான்றிதழினை அடுத்துவரும் ஆண்டுகளின் போது தேவையான சந்தர்ப்பங்களில் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. உங்களால் காட்டப்பட்டுள்ளவாறு ஒரு ஆண்டு தொடர்பாக செலுத்தப்பட்ட பங்கிலாப அளவான ரூபா 25 மில்லியன் தொகை முன்கொண்டுவரப்பட்ட இலாபத்திற்கு (Retained Earnings) கணக்குகளில் செம்மையாக்கப்பட்டது. | 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 56 ஆம் பிரிவின் பிரகாரம் கடன் செலுத்தும் இயலுமை தொடர்பான சான்றிதழினை கணக்காய்வாளர்களிடமிருந்து பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2018 ஒக்தோபர் 23 ஆந் திகதிய 05/2018 ஆம் இலக்க, 2018 நவம்பர் 16 ஆந் திகதிய 05 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கை மற்றும் 2019 திசெம்பர் 17 ஆந் திகதிய 08/2019 ஆம் இலக்க நிதி, பொருளாதார மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு சுற்றறிக்கை | இலங்கையில் இலத்திரனியல் அரசாங்க பெறுகை (e.GP) முறைமையை அமுல்படுத்துவது சம்பந்தமாக பெறுகை நிறுவனத்தை பதிவுசெய்தல், ஒருங்கிணைப்பு உத்தியோகத்தரை பதிவுசெய்தல், வருடாந்த பெறுகைத் திட்டத்தினை வெளியிடுதல், பெறுகை அறிவித்தல்களை வெளியிடுதல் Shopping முறைமை e-GP முறைமையைப் பயன்படுத்துதல் முதலியவை சம்பந்தமாக சுற்றறிக்கையின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இலத்திரனியல் அரசாங்க பெறுகை (e-GP) முறைமையை அமுல்படுத்தலினை முறைப்படியாக ஆய்வு செய்ததன் பின்னர் படிப்படியாக எங்கள் நிறுவனத்திற்கு அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | உரிய சுற்றறிக்கையில் காட்டப்பட்டுள்ளவாறு பெறுகை சம்பந்தமாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய முறைமைக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | திறைசேரி செயலாளரின் 2022 சனவரி 14 ஆந் திகதிய 01/2015 (ii) ஆம் இலக்க அரசாங்க தொழில்முயற்சிகள் சுற்றறிக்கை | கூட்டுத்தாபனம், சபைகள் மற்றும் அரசாங்க கம்பனிகளின் போக்குவரத்து வசதிகளைப் பெற்றுக்கொள்ளக்கூடிய 03 ஊத்தியோகத்தர் தொகுதிகளுக்காக ஒப்படைக்கப்பட்டுள்ள வாகனங்களுக்காக மாதாந்தம் பெற்றுக்கொள்ளக்கூடிய எரிபொருள் எல்லையை மிகைத்து அந்த 03 உத்தியோகத்தர் தொகுதிகளுக்கிடையே 90 லீற்றர், 85 லீற்றர் மற்றும் 40 லீற்றராக சுற்றறிக்கைக்கு முரணாக எரிபொருள் வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த அதிகரிப்பு 62 சதவீதம், 59 சதவீதம் மற்றும் 30 சதவீதமாக இருந்ததனால் 2023 யூன் மாதத்திலிருந்து திசெம்பர் மாதம் வரையான 07 மாதங்களுக்கு ரூபா 621,581 (1670 லிற்றர்) மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. | இலங்கை துறைமுக அதிகார சபையின் இணைந்த நிறுவனமாக செயற்படுகின்ற ஜயா கன்டேனர் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனம் காலத்துக்கு காலம் எடுக்கின்ற பணிப்பாளர் சபை தீர்மானம் தேவையான சந்தர்ப்பங்களின் போது வரிசை அமைச்சினூடாக நிதி அமைச்சின் அங்கீகாரத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டது. இச்செயற்பாட்டினை முறைப்படியாக மேற்கொள்வதற்காக 2022-01-31, 2022-03-14 மற்றும் 2022-05-09 ஆந் திகதிகளின் போது நிதி அமைச்சின் மூலம் JCT நிறுவனத்திற்கு இதற்குப் பின்னர் இலங்கை துறைமுக அதிகார சபையின் இணைந்த நிறுவனமாக உரிய அங்கீகாரத்துடன் தாய் நிறுவனமமான இலங்கை துறைமுக அதிகார சபையிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட எழுத்துமுல அங்கீகாரத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுவதாக எழுத்து மூலம் தெரிவிக்கப்பட்டது. அந்த அறிவுறுத்தல்களுக்கு இணங்க இந்த எரிபொருள் எல்லையை அதிகரிப்பதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தைப் பெற்று முறையான நடைமுறை பின்பற்றப்பட்டது எனக் குறிப்பிடுகிறேன்.<br><br>நாட்டில் காணப்பட்ட பாரதூரமான எரிபொருள் சிக்கலுக்கு நேரடியாக பங்களிப்புச் செய்கின்ற ஒரு நிறுவனமான JCT நிறுவனத்தை முறையாக பேணுவதற்காக | சுற்றறிக்கையில் காட்டப்பட்டுள்ள எரிபொருள் எல்லையை மிகைத்து நடவடிக்கை எடுக்காதிருத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | உத்தியோகத்தர்கள் நாளாந்தம் சேவைக்கு சமூகமளிக்க வேண்டும் என்பதனால் JCT நிறுவனத்தின் நாளாந்த நடவடிக்கைகளை முறையாகவும் ஒழுங்காகவும் செயற்படுத்தும் குறிக்கோளில் உத்தியோகத்தர்களின் எரிபொருள் தேவைப்பாட்டினைக் கருத்தில் கொண்ட இலங்கை துறைமுக அதிகார சபையின் சமாந்தர பதவிகளுக்கு வழங்கப்படுகின்ற எரிபொருள் படியையும் கவனத்தில் கொண்டு முறையான நடைமுறையினைப் பின்பற்றி எங்கள் நிறுவனத்தின் சமாந்தர தரத்திலுள்ள உத்தியோகத்தர்களுக்கு இந்த எரிபொருளை அதிகரிப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் இந்த உத்தியோகத்தர்களுக்கு உத்தியோகபூர்வ வீட்டு வசதிகள் வழங்கப்படாததுடன் எரிபொருள் மற்றும் பொருளாதார சிக்கல் அடிக்கடி ஏற்பட்ட காலப்பகுதியினை கருத்தில் கொண்டு சேவையை தொடர்ச்சியாக பேணுவதற்கும் இலாபத்தன்மை அதிகரிப்பதனையும் கவனத்தில் கொண்டு இத்தீர்மானம் எடுக்கப்பட்டது. | |
| (உ) | அரசாங்க தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் 2023 மார்ச் 14 ஆந் திதகிய 02.⁚.2023 ஆம் இலக்க சுற்றிக்கை | 2023 ஆம் ஆண்டிற்காக அங்கிகரிக்கப்பட்டுள்ள பாதீட்டின் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள மீண்டுவரும் செலவுகள் 06 சதவீதத்தால் குறைக்கப்பட்டுள்ளதாக காட்டப்பட்டிருந்தும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எங்கள் நிறுவனத்தினால் 2023 மாரச் 14 ஆந் திகதிய 02/2023 ஆம் இலக்க சுற்றறிக்கை மற்றும் 2022/04 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கைக்கு (Public Enterprises Circular) இணங்க எங்கள் நிறுவனத்தின் செலவுகளைக் | திறைசேரியிடமிருந்து செலவுகளை மட்டுப்படுத்துவதற்காக வழங்கப்பட்டுள்ள சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் |

| | | |
|---|---|---|
| | குறைப்பதற்காக பிரேரணைகளைச் சமர்ப்பிப்பதற்காக ஒரு குழு முகாமைத்துவ பணிப்பாளர் அவர்களின் தலைமைத்துவத்தில் மற்றும் பிரிவுத் தலைவரின் பங்குபற்றலில் நடாத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டு துறைமுகங்கள், கப்பல் துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சின் செயலாளருக்கும் அப்பிரேரணை அனுப்பிவைக்கப்பட்ட து. இச்சுற்றறிக்கைக்கு இணங்க 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் பல கூட்டங்கள் நடாத்தப்பட்டன. அக்கூட்டங்களில் கலந்துரையாடப்பட்ட செலவுகளைக் குறைக்கும் பிரேரணைகளுடன் கூட்ட அறிக்கைகள் பணிப்பாளர்கள் சபையின் அங்கீகாரத்திற்காகவும் அனுப்பிவைக்கப்பட்ட து. எனவே மேலே குறிப்பிட்ட சுற்றறிக்கை தொடர்பாக எங்கள் நிறுவனத்தின் கவனம் முறையாக செலுத்தப்பட்டு அதற்கிணங்க எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் முறைப்படியாக எடுக்கப்பட்டுள்து எனத் தெரிவிக்கிறேன். | வேண்டும். |

## 1.7 வரிப் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | தேசிய இறைவரி ஆணையாளர் நாகத்தின் 2023 ஒக்தோபர் 24 ஆந் திகதிய FPFS / CONF/2023/25 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் சமூக பாதுகாப்பு பங்களிப்பு வரி அதிகாரச்சட்டத்தின் முதலாம் பட்டோலையின் ii ஆம் பகுதியின் 04 | சமூக பாதுகாப்பு வரி 2022 ஒக்தோபர் மாதம் அறிமுகப்படுத்தப்பட்டதோடு எங்கள் நிறுவனத்தின் வருமான விடயங்களுக்காக அதன் தொடர்புகள் பற்றி எங்களின் வரி ஆலோசனைக் கம்பனியான அமர சேகர அன்ட் கம்பனியிடமிருந்து ஆலோசனை பெற்றுக்கொள்ளப்பட்டது. அந்த | அரசாங்கத்தினால் அறிமுப்படுத்தப்பட்ட வரி அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் உரிய வரியை சேகரித்து அரசாங்கத்திற்கு |

| | | |
|---|---|---|
| ஆம் விடயத்தின் கீழ் பெற்றோலியத்தை பம்பிகளால் பாய்ச்சும் கட்டணம் வரியிலிருந்து விடுவிக்கப்பட்ட சேவையாக கருதமுடியாது எனக் காட்டப்பட்டிருந்தும் 2022 ஒக்தோபர் மாதத்திலிருந்து திசெம்பர் வரை மற்றும் 2023 சனவரியிலிருந்து திசெம்பர் மாதம் வரை முறையாக ரூபா 115,462,139 மற்றும் ரூபா 420,136,784 தொகையான பம்பிகளால் பாய்ச்சும் கட்டணத்தின் அடிப்படையில் அறவிட வேண்டிய சமூக பாதுகாப்பு வரி ரூபா 2,960,568 மற்றும் ரூபா 10,772,738 தொகைகள் அறவிடப்பட்டு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆலோசனைகளுக்கு இணங்க பெற்றோலியத்தை பாய்ச்சும் சேவை (Pumping Charge) இந்த வரியிலிருந்து விடுவிக்கப்படுகின்றது என தெரிவிக்கப்பட்டது.<br><br>இந்நிலைமை தொடர்பாக இலங்கை துறைமுக அதிகார சபைக்கு கடிதம் அனுப்பி தெரிவிக்கப்பட்டதுடன் 2024 மார்ச் 28 ஆந் திகதி அதிகார சபையினால் தெரிவிக்கப்பட்டதானது உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களை சந்தித்து இந்நிலைமை தொடர்பாக மேலும் கலந்துரையாடி தீர்மானம் எடுக்குமாறாகும். அதற்கிணங்க அமரசேகர அன்ட் கம்பனியால் இது தொடர்பாக 2024-04-04 ஆந் திகதி இலங்கை துறைமுக அதிகார சபையின் உத்தியோகத்தர்களும் உள்நாட்டு இறைவரித் திணைக்கள உத்தியோகத்தர்களும் கூடி கலந்துரையாடல் நடாத்தப்பட்டது. அதன் போது பம்பிகளால் பாய்ச்சும் சேவையானது Transportation of Goods என்ற வகுதிக்குள் வருவதாகக் கூறியதாக அமரசேகர அன்ட் கம்பனி தெரிவித்தது. எவ்வாறாயினும் இது தொடர்பாக எதிர்காலத்தில் இன்னும் கலந்துரையாடல் நடாத்தப்படும். | அனுப்பிவைத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 243.8 மில்லியன் மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 245.6 மில்லியனாகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் 01 சதவீதமான குறைவு காணப்பட்டது.

### 2.2. பிரதான வருமான மற்றும் செலவு விடய்ங்களின் போக்கு பகுப்பாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வாகனங்களுக்கான எரிபொருள் செலவுகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 4.7 மில்லியனிலிருந்து ரூபா 7.1 மில்லியன் வரை ரூபா 2.4 மில்லியனால் அதிகரித்திருந்தது. இது 50 சதவீத அதிகரிப்பாகும். இதற்காக உத்தியோகத்தர்களின் வாகனங்களுக்காக வழங்கப்படுகின்ற எரிபொருள் எல்லையை அதிகரிப்பதும் காரணமாக இருந்தது.

(ii) அலுவலக வாகன பராமரிப்பு செலவு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 6.1 மில்லியனிலிருந்து ரூபா 10.2 மில்லியன் வரை ரூபா 4.1 மில்லியனால் அதிகரித்திருந்தது. இது 68 சதவீத அதிகரிப்பாகும். இதில் அண்ணளவாக ரூபா 03 மில்லியன் மற்றும் ரூபா 1.8 மில்லியன் முறையே தலைவரின் உத்தியோகபூர்வ வாகனம் மற்றும் அமைச்சினால் ஒப்படைக்கப்பட்டுள்ள காரினை பராமரிப்பதற்காகச் செலவு செய்யப்பட்டிருந்தது.

## 2.3 விகிதாசார மீளாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

2018 ஆம் ஆண்டில் நடைமுறை விகிதம் விரைவுச் சொத்து விகிதம் முறையே 19.04:1 மற்றும் 18.93:1 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் அது முறையே 5.16:1 மற்றும் 5.09:1 வரை படிப்படியாக குறைவடைந்திருந்தது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது நடைமுறை விகிதமும் விரைவுச் சொத்து விகிதமும் முறையே 1.08 மற்றும் 1.04 ஆல் அதிகரித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீாய்வு

### 3.1 பயன்படத்தப்படாத அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 1000 மெட்ரிக் தொன் கொள்லளவினைக் கொண்ட 102 ஆம் இலக்க எண்ணை தாங்கியில் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 380 (HSFO) 275 மெட்ரிக் தொன்கள் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது. அது உள்ளடங்கியிருந்ததானது இரண்டு கம்பனிகளின் 40.26 மெட்ரிக் தொன்களும், இலங்கை துறைமுக அதிகாரசபையின் 72 மெட்ரிக் தொன்களும் இலங்கை சுங்கத்தினால் பறிமுதல் செய்யப்பட்ட 162.257 மெட்ரிக் தொன் பெற்றோலியமாகும். சட்ட நடவடிக்கைகளுக்காக சுங்கத்தினால் இந்த பெற்றோலிய தாங்கிகள் சீல் செய்யப்பட்டுள்ளதனால் 2020 ஆம் ஆண்டிலிருந்து செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ள முடியாது விளைவற்றுக் காணப்பட்டது. | இந்த தாங்கியில் காணப்பட்ட பெற்றோலியம் இலங்கை சுங்கத்தினால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதனால் மற்றும் அது தொடர்பாக வழக்கு நடவடிக்கைகள் காணப்படுவதனாலும் இது தொடர்பாக எங்கள் நிறுவனம் பல தடவைகள் இப்பெற்றோலியத்தை அகற்றுமாறு இலங்கை சுங்கத்திற்கு தெரிவித்திருந்தது. அவ்வாறே துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சின் செயலாளரின் தலைமைத்தவத்தில் நடாத்தப்பட்ட பல கூட்டங்களின் போதும் சுங்க உத்தியோகத்தர்களுக்கு இது தொடர்பாக தெரிவித்து இப்பெற்றோலியத்தை மிக விரைவில் அகற்றுமாறு தெரிவிக்கப்பட்டது. | உரிய தரப்பினர்களுடன் கலந்துரையாடி பெற்றோலிய தாங்கிகளின் இடவசதிகளை முகாமைத்துவம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மனித வளங்கள் செயற்பாடுகள் மற்றும் சம்பள ஆவணங்கள் தொடர்பான நடவடிக்கைகள் கைகளால் (manual) செய்யப்படுவதன் காரணமாக வினைத்திறனாகவும் ஆக்குபூர்வமாகவும் நிறைவேற்றுவதற்கு நுட்பமுறைகள் தேவைப்படுவதனால் 2021 ஆம் ஆண்டிலிருந்து ரூபா 976,000 செலவு செய்து பெற்றுக்கொள்ளப்பட்ட HR& Payroll முறைமை தற்பொழுது | சேவை வேலை முறைமையின் கீழ் சேவையாற்றுகின்ற ஊழியர்கள் 24 மணித்தியால வேலை முறைமைக்காக (மு.பகல் 08.00 அடுத்தநாள் மு.பகல் 08.00/ மு.பகல் 8.30 அடுத்த நாள் மு.பகல் 8.30) அழைப்பதன் காரணமாக 03 நாட்களுக்கு சேவையாற்றுகின்ற காலப்பகுதிகள் கணனி மென்பொருள் முறைமைக்கு தனித்தனியாக சுயமாக அடையாளங்காணமுடியாத குறைபாடு தொடர்பாக இந்த மென்பொருளினைத் தயாரித்த Antler IT Soutions கம்பனியால் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தருடன் நடைபெற்ற 2024/04/19 ஆந் திகதிய கூட்டத்தின் போது இக்குறைபாட்டினை | பெறுகை வழிகாட்டிக் கோவையின் ஒழுங்கு விதிகளுடன் இணங்கியிருத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| செயற்படுத்த முடியாத நிலையில் காணப்படுதல் மற்றும் HR& Payroll முறைமையின் மூலம் பெற்றுக்கொள்ள வேண்டிய இறுதிப் பெறுபேறான சம்பளப் பத்திரத்தினை சரியாக அச்சிட்டுக்கொள்வதற்கு மேற்கொள்ளப்பட்ட செலவுகக்கு உச்ச அளவான பிரதிபலன்களைப் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. | சரிசெய்வதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்படும் என இணங்கிக் கொண்டதுடன் தற்பொழுது அறிவிக்கப்பட்டுள்ள ஏனைய குறைபாடுகள் தொடர்பாக தேவையான மேம்படுத்தல்களைச் செய்வதற்கு அக்கம்பனியால் நடவடிக்கை எடுப்பதற்கு இணங்கிக்கொள்ளப்பட்டது. இச்செயற்திட்டத்தினை மதிப்பீடு செய்ததன் பின்னர் மேற்கொள்ளப்படுகின்ற மேலதிக நேர வேலையை பெற்றுக்கொள்ளல் மற்றும் நெகிழ்வுத் தன்மையான அலுவலக நேரங்களை அறிமுகப்படுத்துதல் போன்ற மாற்றங்களின் காரணமாக தற்பொழுது தயாரிக்கப்பட்டுள்ள மென்பொருளில் மாற்றங்கள் செய்ய வேண்டியுள்ளது. | |

## 3.3 மனித வளங்கள் முகாமைத்துவம்

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையுடன் வழங்கப்பட்டுள்ள அரசாங்க தொழில் முற்சிகளுக்கான செயற்பாட்டு கையேட்டின் (Operational Manual) 3.2 (ii) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனிக்கு முறைப்படியான ஆட்சேர்ப்பு நடைமுறை தயாரிக்கப்பட்டு அதற்காக பணிப்பாளர் சபையின் மற்றும் வரிசை அமைச்சின் அங்கீகாரம் மற்றும் பொது முயற்சிகள் திணைக்களத்தின் இணக்கப்பாடு பெற்றுக்கொள்ளப்படாதிருந்ததுடன் அதன் 3.3 (ii) ஆம் பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு அரசாங்க நிறுவனத்தினாலும் அங்கீகரித்த ஊழியர் எண்ணிக்கையுடன் தாபனக் கட்டமைப்பு தயாரிக்கப்பட்டிருக்க வேண்டிய போதிலும் கம்பனி அத்தேவைப்பாட்டினை நிறைவேற்றியிருக்கவில்லை. | ஜயா கன்டேனர் டேர்மினல்ஸ் லிமிடட் கம்பனியின் அங்கீகரித்த ஊழியர் எண்ணிக்கையுடன் தாபன கட்டமைப்பு மற்றும் ஆட்சேர்ப்பு நடைமுறை தொடர்பான வரைபு மனித வளங்கள் குழுவிற்கு தற்பொழுது சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படும். | அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |